செ.வெ.எண்: 76

நாள்: 31-03-2017

## பத்திரிக்கை செய்தி

### தமிழக அரசு திருநெல்வேலி மாவட்ட சமூகநலத்துறையும் பேஸ் அறக்கட்டளை தொண்டு நிறுவனமும் இணைந்து நடத்தும் திருநங்கைகளுக்கான விழிப்புணர்வு பயிற்சி

தமிழக அரசு திருநெல்வேலி மாவட்ட சமூகநலத்துறை மற்றும் பேஸ் அறக்கட்டளை தொண்டு நிறுவனம் இணைந்து 31.03.2017 முதல் 03.04.2017 வரை IOB கிராம சுயவேலைவாய்ப்பு பயிற்சி மையத்தில் திருநங்கைகளுக்கான விழிப்புணர்வு பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் கலந்து கொண்ட அனைவரையும் பேஸ் அறக்கட்டளை தொண்டு நிறுவனத்தின் இயக்குநர் திரு. பொன். மனோகரன் அவர்கள் வரவேற்று திட்ட விளக்கவுரையாற்றினார். அப்போது அவர் பேசுகையில் இப்பயிற்சியானது எச்.ஐ.வி / எய்ட்ஸ் தடுப்பு பணிகளைத் தவிர, அரசுக்கும் இலக்கு மக்களான திருநங்கைகளுக்கும் இணைப்பு பாலமாக இருந்து அவர்களின் வாழ்வாதாரத்தை ஏற்படுத்தும் புதிய முயற்சிகளையும் புதிய தொழில் வாய்ப்புகளை கண்டறியவும் இப்பயிற்சி அளிக்கப்படுகிறது என விளக்கி கூறினார்.

இப்பயிற்சிக்கு தலைமையேற்ற மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி. S. முத்துலெட்சுமி அவர்கள் பேசுகையில், திருநெல்வேலியில், திருநங்கை நலவாரியம் அமைக்கப்பட்ட பின்பு, முதன் முதலாக, விழிப்புணர்வு பயிற்சி இன்று துவக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் மூலம் திருநங்கைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், திறமையானவர்களை சமூகத்தில் மேம்படுத்திடவும் அரசு பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி வருகின்றது. இத்திட்டங்களை பெற்று தங்களது திறனை வளர்த்திட அறிவுறுத்தினார்.

தொடர்ந்து விழிப்புணர்வு பயிற்சியில் IOB RSETI இயக்குநர் திரு. R. இளங்கோ அவர்கள் விழிப்புணர்வு பயிற்சியில் பல்வேறு வகையான திறன் வளர்ப்பு பயிற்சியின் மூலம் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும். இப்பயிற்சி மையத்தில் பல்வேறு வகையான திறன் வளர்ப்பு பயிற்சிகள் திருநங்கைகளுக்காக பிரத்தியேகமாக உருவாக்கி பயிற்சி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இப்பயிற்சியின், தொழில் முனைவோரின் பண்புகள், தொழில் முனைவராக உருவாகுவது எவ்வாறு? அரசிடமிருந்து சலுகைகள் பெறுவது எவ்வாறு மற்றும் நலத்திட்ட மானியங்கள் பற்றியும் எடுத்துரைத்தார்.

இப்பயிற்சியில் ஏராளமான திருநங்கைகள் கலந்து கொண்டனர். இறுதியாக முதல் நாள் பயிற்சியில் கலந்து கொண்டு சிறப்பித்த அனைவருக்கும் பேஸ் அறக்கட்டளை தொண்டு நிறுவனத்தின் திட்ட மேலாளர் திருமதி. சுந்தரகனி அவர்கள் நன்றி கூறி நிறைவு செய்யப்பட்டது.

இச்செய்தியை தங்கள் நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

ஒத்துழைப்பிற்கு நன்றி

திருமதி. சுந்தரகனி, திட்ட மேலாளர்,
பேஸ் அறக்கட்டளை தொண்டு நிறுவனம்
9942096570
9894074944

வெளியீடு

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி